2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில், புதிய பேருந்து நிலையம் திருநெல்வேலி–கடையம் மாநில நெடுஞ்சாலையில், பேரூராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலத்தில், 3 ஏக்கர் பரப்பளவில், உள்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின்கீழ், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் நித்தம் நித்தம் புதுத் திட்டம், தமிழக மக்களுக்கெல்லாம் கொண்டாட்டம், இங்கே எதிர்க்கட்சிகள் எல்லாம் திக்குமுக்கு திண்டாட்டம் என்று நாள்தோறும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களை அள்ளித் தரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, முக்கூடல் பேரூராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஆலங்குளம் தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

270—

நிலங்கள் ஒப்படைப்பு

***7368—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 19

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை நில உரிமையாளர்களுக்குத் திரும்ப வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வசம் உள்ள பயன்பாடு இல்லாத நிலங்களில், வீட்டு வசதித் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இந்நிலங்களை நில உரிமையாளர்களுக்கு வழங்கும் உத்தேசமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகமாக, கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளுக்கும் மேலாக தரிசாகவே கிடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது அதைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகச் சொன்னார்கள். பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் பரவாயில்லை. இல்லையென்று சொன்னால், 10, 15 ஆண்டுகளாக அந்த நிலங்களைக் கையகப்படுத்திய காரணத்தினாலே, சாதாரண விவசாயிகள் ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம்கூட இன்னும் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்று பணம் கொடுப்பதற்காகவோ அல்லது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் கையகப்படுத்திய அனைத்து நிலங்களுக்கும், நில உரிமையாளர்களுக்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. நில உரிமையாளர்கள் பணத்தைப்பெறாமல், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள், நிச்சயமாக யாருக்காவது பணம் கிடைக்கவில்லையென்று சொன்னால், வாரியம் உடனடியாக அவர்களுக்கு வழங்கும். மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம் 2023 இல் 75 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 25 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் வாரியம் கையகப்படுத்திய நிலங்களைத் திருப்பி ஒப்படைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்கெட் விலை நிர்ணயத்திற்கேற்ப விலை கிடைக்காத காரணத்தினாலே, சம்பந்தப்பட்ட விவசாயிகள் அதை பெறாமல் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய மார்க்கெட் நிலவரத்திற்கேற்ப விலையைக் கொடுப்பார்களேயானால், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எனவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் கையகப்படுத்திய இடங்களின் நில மதிப்பு போதவில்லை என்ற வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின்படி நில உரிமையாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு, வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நில உரிமையாளர் பணம் வாங்காமல் இருக்கின்றார், இல்லை வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அவருக்கு வேண்டிய உதவிகளை வாரியம் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.